# கொழும்பு மாநகர சபை

## பதவி வெற்றிடங்களுக்கு திறந்த அடிப்படையிலான ஆட்சேப்பு- 2026

கீழ்க் காணும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக மேல் மாகாணத்தில் நிரந்தர வசிப்பிடமுடைய கீழ்க் காணும் தகைமைகள் பூர்த்திசெய்துள்ள பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

❖ பொதுவான தகைமைகள்:-

I. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

II. விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதி திகதிக்கு (2026.08.10) அண்மித்த மூன்று (03) ஆண்டுகள் தொடர்ச்சியாக மேல் மாகாணத்தில் நிரந்தர வசிப்பிடத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

III. சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

IV. பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு போதுமான உடல் மற்றும் உளத் தகுதியும் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

V. பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவையான அனைத்து தகைமைகளும் விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு (2026.08.10) எல்லாவகையிலும் பூர்த்திசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

### 01. <u>மேல் மாகாணத்தில் உள்ளூராட்சி நிறுவனங்களில் ஆரம்ப மட்ட- பயிற்றப்படாத சேவை வகுதியின் கீழே தரப்பட்டுள்ள IIIஆம் தரத்தின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச்செய்தல்.</u>

- சம்பள முறை:- அரச நிருவாக சுற்றறிக்கை இல.10/2025 இன்படி PL 1-2025 (1ஆவது சம்பள படிமுறை ஆரம்பச் சம்பளமாகும்)

ரூபா.**40,000-10X450- 10x490-10X540- 12X590 – 61,880/-**
(சம்பளம் செலுத்தப்படுவது அட்டவணை III இல் குறிப்பிடப்பட்ட பிரகாரமாகும்)

| பதவிப்பெயர் | வயதெல்லை | கல்வித் தகைமைகள் | ஆட்சேர்ப்பு முறை | பரீட்சை கட்டணம் |
|---|---|---|---|---|
| • அலுவலக ஊழியர் சேவை (அலுவலக வேலை உதவியாளர்) | வயது 18-45 | க.பொ.த.(சா.த.) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாதவாறு குறைந்த பட்சம் இரண்டு பாடங்களுக்கு திறமைச்சித்திகள் அடங்களாக ஆறு (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இதில் ஐந்து (05) பாடங்கள் ஒரே தடவையில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். | கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை | பொருந்தாது |
| • வேலை/கள தொழிலாளர் | வயது 18-45 | தரம் 08 (09ஆம் ஆண்டு) சித்திபெற்றிருத்தல் வேண்டும். | கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை | பொருந்தாது |
| • மரம் வெட்டுபவர்<br>• கவனிப்பாளர்<br>• மயானபூமி பொறுப்பாளர்<br>• இரசாயனகூட ஊழியர் (உதவியாளர்)<br>• நாய்கள் பிடிப்பவர்.<br>• கள வேலை உதவியாளர் | வயது 18-45 | க.பொ.த.(சா.த.) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாதவாறு குறைந்த பட்சம் இரண்டு பாடங்களுக்கு திறமைச்சித்திகள் அடங்களாக ஆறு (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இதில் ஐந்து (05) பாடங்கள் ஒரே தடவையில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். | கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை | பொருந்தாது |

02. **<u>மேல் மாகாண அரச சேவையில் கொழும்பு மாநகர சபையில் முகாமைத்துவ உதவியாளர் தொழிநுட்பம் அல்லாத பிரிவு 2 சேவை வகுதியின் விளையாட்டு ஆலோசகர் IIIஆம் தரம் பதவி</u>**

- சம்பள முறை:- அரச நிருவாக சுற்றறிக்கை இல.10/2025 இன்படி MN 1-2025 (1ஆவது சம்பள படிமுறை ஆரம்பச் சம்பளமாகும்)

  ரூபா.**45,230-10X540- 11X630- 10X890-10x1190-78,360/-**

  (சம்பளம் செலுத்தப்படுவது அட்டவணை III இல் குறிப்பிடப்பட்ட பிரகாரமாகும்)

| **பதவிப் பெயர்** | **வயதெல்லை** | **கல்வித் தகைமைகள்** | **தொழில்சார் தகைமைகள்** | **அனுபவம்** | **ஆட்சேர்ப்பு முறை** | **பரீட்சை கட்டணம்** |
|---|---|---|---|---|---|---|
| விளையாட்டு ஆலோசகர் | வயது 18-45 | க.பொ.த.(சா.த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் மொழி, கணிதம் மற்றும் இன்னும் இரண்டு பாடங்களுக்கு திறமைச்சித்திகள் அடங்களாக ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல் மற்றும் க.பொ.த.(உ.த.) பரீட்சையில் குறைந்த பட்சம் ஒரு (01) பாடமாவது (பொதுப் பரீட்சை தவிர்ந்த) சித்திபெற்றிருத்தல் வேண்டும். | அரசாங்கத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தில் விளையாட்டு முகாமைத்துவம்/ விளையாட்டரங்கு பராமரித்தல் தொடர்பான குறைந்த பட்சம் ஆறு (06) மாத கால பாடநெறியொன்றை வெற்றிகரமாக பூர்த்திசெய்திருத்தல் அல்லது சர்வதேச அல்லது தேசிய மட்ட விளையாட்டு பயிற்றுவிப்பாளர்/ விளையாட்டுப் போட்டி நடுவர் தொடர்பான பாடநெறியொன்றை கற்று இருத்தல் அல்லது சர்வதேச அல்லது தேசிய மட்ட விளையாட்டு பயிற்றுவிப்பாளராக/ விளையாட்டுப் போட்டி நடுவராக கடமையாற்றியிருத்தல் அல்லது தேசிய மட்ட அல்லது முதற்தர விளையாட்டுப் போட்டிகளில் தனி /குழுவாக பிரதிநிதித்துவப்படுத்தி இருத்தல் | பாடசாலை மட்டத்தில் அல்லது விளையாட்டுக் கழக மட்டத்தில் பயிற்றுவிப்பாளராக குறைந்த பட்சம் இரண்டு (02) ஆண்டுகள் அனுபவம் இருத்தல் வேண்டும். | எழுத்து மூலப் பரீட்சையில் சித்திபெறும் விண்ணப்பதாரர்கள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக்கு ஈடுபடுத்தப்பட்டு, எழுத்து மூலப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை ஆகிய இரண்டிலும் பெற்ற புள்ளிகளின் கூட்டுத் தொகையின் அடிப்படையில் முறையே அதிக புள்ளிகள் பெறும் விண்ணப்பதாரர்களுள் வெற்றிடங்கள் நிரப்பப்படும். | ரூபா 500/- (செலுத்த வேண்டிய முறை விண்ணப்ப படிவத்தரில் குறிப்பிடப்பட்டுள்ளது) |

❖ <u>பரீட்சைக்கான பாடத்திட்டம்</u>

| **வினாப்பத்திரத்தின் பெயர்** | **பாடத்திட்டம்** | **காலம்** |
|---|---|---|
| விளையாட்டுக்கள் பற்றிய அடிப்படை அறிவு | தேசிய மட்ட விளையாட்டுக்கள்/ பல்வித விளையாட்டுக்கள் தொடர்பான அறிவையும் விளையாட்டு சட்ட விதிமுறைகள் பற்றிய அறிவையும் பரிசோதிக்கும் வினாப்பத்திரம். | 02 மணித்தியாலம் |
| உளச்சார்பு | தர்க்கத் திறன் மற்றும் கணிதத் திறன், உடனடித்தீர்மானம் எடுக்கும் மற்றும் நேர முகாமைத்துவம் செய்யும் திறனை மதிப்பிடும் வினாப்பத்திரமாகும். | 01 மணித்தியாலம் |

03. **<u>மேல் மாகாண அரச சேவையில் கொழும்பு மாநகர சபையில் மோட்டர் வாகன சாரதி IIIஆம் தரம் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல்.</u>**

- சம்பள முறை:- அரச நிருவாக சுற்றறிக்கை இல.10/2025 இன்படி PL 3-2025 (1ஆவது சம்பள படிமுறை ஆரம்பச் சம்பளமாகும்)

  ரூபா.**42,780-10X490- 10X540- 10X590-12x630-66,540/-**

  (சம்பளம் செலுத்தப்படுவது அட்டவணை III இல் குறிப்பிடப்பட்ட பிரகாரமாகும்)

| **பதவிப் பெயர்** | **வயதெல்லை** | **கல்வித் தகைமைகள்** | **தொழில்சார் தகைமைகள்** | **அனுபவம்** | **ஆட்சேர்ப்பு முறை** | **பரீட்சை கட்டணம்** |
|---|---|---|---|---|---|---|
| மோட்டர் வாகன சாரதி | வயது 18-45 (ஏற்கனவே மேல் மாகாண அரச சேவையில் ஈடுபடும் நிரந்தர மற்றும் ஓய்வூதியம் கொண்ட நியமனதாரர் களுக்கு அதிகூடிய வயதெல்லை உரித்தாகாது ) | க.பொ.த.(சா.த.) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாதவாறு குறைந்த பட்சம் சிங்களம்/தமிழ் மொழி உள்ளிட்ட இரண்டு (02) பாடங்களுக்கு திறமைச்சித்திகள் அடங்களாக ஆறு (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். (இதில் ஐந்து (05) பாடங்கள் ஒரே தடவையில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.) | சாரதி அனுமதி அட்டை பெற்றபின் வாகன சாரதியாக குறைந்த பட்சம் மூன்று (03) வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும் (முறையான சான்றிதழ் மூலம் சேவை அனுபவத்தை நிரூபிக்க வேண்டும்.) | i. குறைந்த பட்சம் உயரம் ஐந்து (5’) அடி இருக்க வேண்டும்.<br>ii. பகல்/இரவு காலங்களில் சேவை புரிவதற்கு பொருத்தமான உடல் நலம் கொண்டவராகவும் ,சிறந்த கண் பார்வையுடையவராகவும் இருத்தல் வேண்டும். (அரசாங்க வைத்திய அதிகாரியினால் வழங்கப்பட்ட சான்றிதழ் மூலம் அது தொடர்பாக நிரூபிக்க வேண்டும்.) | தொழில்சார் பரீட்சை மற்றும் சாதாரண நேர்முகப் பரீட்சை மூலம்.<br><br>**<u>தொழில்சார் பரீட்சை</u>**<br>i. வாகனம் ஓட்டுதல் பற்றிய தேர்ச்சி<br>ii. வீதிச் சட்டங்கள் பற்றிய நடைமுறை அறிவு<br>iii. மோட்டர் இயந்திரவியல் பற்றிய அடிப்படை அறிவு. | பொருந்தாது |

**<u>தொழில்சார் தகைமை:-</u>**

இலகு வாகன சாரதி பதவிக்காக:-

i. தனியார்/வாடகை வாகன மற்றும் வெற்று வாகன நிறை ஹொன்டர் 24க்கு குறைந்த ஸ்டேஷன்வெக்கன் வாகனம் ஒட்டுதல் பற்றிய மோட்டர் வாகன போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்பட்ட வாகனம் ஓட்டுதல் பற்றிய அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும். (ஆட்சேர்ப்பு செய்யப்படும் திகதிக்கு மூன்ற வருடங்களுக்கு (03) முன்னர் குறைந்த பட்சம் “சி” மற்றும் “சி 1” வாகன வகுப்பு அனுமதிப்பத்திரம் அல்லது புதிய சாரதி அனுமதிப்பத்திரத்தின்படி “பி” வகுப்பு அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும்.)

ii. பெருந்தெருக்கல் சட்டக் கோவை தொடர்பாக சிறந்த அறிவுடையவராக இருத்தல் வேண்டும்.

கனரக வாகன சாரதி பதவிக்காக:-

i. வெற்று வாகன நிறை ஹொன்டர் 34 வரையான இலகு லொறி மற்றும் பயணிகள் 32 பேருக்கு கூடுதலாக ஏற்றிச்செல்லக்கூடிய பேருந்துக்குரிய அனுமதி அட்டை அதாவது, ‘ஏ 1’ மற்றும் ‘சீ 1’ வகுப்பு அனுமதி அட்டை அல்லது புதிய சாரதி அனுமதி அட்டையின்படி ‘பி’ மற்றும் ‘டி1’ வகுப்பு அனுமதி அட்டை அல்லது வெற்று வாகன நிறை ஹொன்டர் 34 க்கு கூடுதலான நிறையுடைய மோட்டார் வாகனமும் கனரக டேலரும் மற்றும் பயணிகள் 32 பேருக்கு கூடுதலாக ஏற்றிச்செல்லக்கூடிய அனுமதி அட்டை பெற்றுள்ள பேருந்துக்கள் ஓட்டுவதற்காக மோட்டர் வாகன போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேர்ச்சி பற்றிய சான்றிதழ் அல்லது ‘ ஏ’ வகுப்பு அனுமதி அட்டை அல்லது புதிய சாரதி அனுமதி அட்டையின்படி ‘டி’ வகுப்பு அனுமதி அட்டை பெற்றிருத்தல் வேண்டும்.

## 04.மேல் மாகாண அரச சேவையில் கொழும்பு மாநகர சபையில் பாதுகாப்பு படைவீரர் IIIஆம் தரம் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல்.

- சம்பள முறை:- அரச நிருவாக சுற்றறிக்கை இல.10/2025 இன்படி PL 2-2025 (1ஆவது சம்பள படிமுறை ஆரம்பச் சம்பளமாகும்)

  ரூபா.**41,800-10X490- 10X540- 10X590-12x630-65,560/-**

  (சம்பளம் செலுத்தப்படுவது அட்டவணை III இல் குறிப்பிடப்பட்ட பிரகாரமாகும்)

| பதவிப் பெயர் | வயதெல்லை | கல்வித் தகைமைகள் | உடல் தகைமைகள் | ஆட்சேர்ப்பு முறை | பரீட்சை கட்டணம் |
|---|---|---|---|---|---|
| பாதுகாப்பு படைவீரர் | வயது 18க்கு குறையாதும் 45க்கு மேற்படாதும் இருத்தல் வேண்டும். | க.பொ.த.(சா.த.) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாதவாறு குறைந்த பட்சம் இரண்டு (02) பாடங்களுக்கு திறமைச்சித்திகள் அடங்களாக ஆறு (06) பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். | ஒவ்வொரு விண்ணப்பதாரியும் கொழும்பு மாநகர சபை அதிகார எல்லைக்குள் சேவைபுரிவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதிய உடல் மற்றும் உள ரீதியான தகுதி இருத்தல் வேண்டும். (ஆண் படைவீரர்கள் உயரம் 5 அடி 3 அங்குலத்திற்கு குறையாதும் மூச்சை வெளியோற்றும் போது மார்பளவு 32 அங்குலத்திற்குக் குறையாதும் இருத்தல் வேண்டும். பெண் படைவீரர்கள் உயரம் 5 அடி 2 அங்குலத்திற்கு குறையாது இருத்தல் வேண்டும்.) | எழுத்து மூலப் பரீட்சையில் பெறப்பட்ட திறமைத் தரவரிசையின் அடிப்படையில், நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையின் இருமடங்கு அளவிலான விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். அதன் பின்னர், விண்ணப்பதாரர்கள் எழுத்து மூலப் பரீட்சையில் பெற்ற புள்ளிகளும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் பெற்ற மொத்த புள்ளிகளும் இணைந்த திறமைத் தரவரிசையின் அடிப்படையில், நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும். | ரூபா 500/- (செலுத்த வேண்டிய முறை விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது) |

❖ **பரீட்சைக்கான பாடத்திட்டம்**

| வினாப்பத்திரத்தின் பெயர் | பாடத்திட்டம் | காலம் |
|---|---|---|
| பொது அறிவு | தேசிய, பிராந்திய மற்றும் உலகின் பல்வேறு நிறுவனச் சூழல்களில் நிலவும் சமூக, கலாச்சார, கல்வி, அறிவியல், அரசியல், பொருளாதார மற்றும் தொடர்புடைய பிற காரணிகளை மதிப்பீடு செய்யும் வினாக்களை உள்ளடக்கிய ஒரு வினாத்தாள் ஆகும் | 01 மணித்தியாலம் |
| நுண்ணறிவுப் பரீட்சை | பொது நுண்ணறிவையும் தர்க்கத் திறனையும் மதிப்பிடும் நோக்கில் கணிதப் பிணக்குகளை உள்ளடக்கிய ஒரு வினாத்தாள் ஆகும். | 01 மணித்தியாலம் |

❖ **கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை**:- மேலே குறிப்பிடப்படும் விண்ணப்பதாரர்களுள் உயரம் மற்றும் மார்பளவு பற்றிய தகுதிகாண் பரீட்சையில் தகைமைபெறுபவர்கள் மட்டும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

<u>விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கும் முறை</u>

1. விண்ணப்பதாரிகள் கொழும்பு மாநகர சபையின் https:www.colombo.mc.gov.lk/news.php இணையத்தளத்தில் தரப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தின் பிரகாரம் A-4 அளவிலான கடிதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தட்டெழுத்துச்செய்யப்பட்ட அல்லது தெளிவான கையெழுத்தினால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை "**மாநகர ஆணையாளர், மாநகர ஆணையாளர் அலுவலகம், கொழும்பு மாநகர சபை, நகர மண்டபம், கொழும்ப 07**," எனும் விலாசத்திற்கு 2026.08.10ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெறும் வகையில் பதிவுத் தபாலில் மட்டும் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவம் அடங்கும் கடிதயுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணபிக்கும் பதவிப்பெயரை குறிப்பிட வேண்டும். 2026.08.10ஆம் திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் மற்றும் நேரில் ஒப்படைக்கும் விண்ணப்பப்படிவங்கள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.
2.

| பதவிப்பெயர் | விண்ணப்பப்படிவத்தின் மாதிரிப்படிவம் |
|---|---|
| • அலுவலக ஊழியர் சேவை (அலுவலக வேலை உதவியாளர்)<br>• வேலை/கள தொழிலாளர்<br>• மரம் வெட்டுபவர்<br>• கவனிப்பாளர்<br>• மயானபூமி பொறுப்பாளர்<br>• இரசாயனகூட ஊழியர் (உதவியாளர்)<br>• நாய்கள் பிடிப்பவர்<br>• கள வேலை உதவியாளர் | மாதரிப்படிவம் இலக்கம் 01<br>https:www.colombo.mc.gov.lk/news.php |
| • விளையாட்டு ஆலோசகர் | மாதரிப்படிவம் இலக்கம் 02<br>https:www.colombo.mc.gov.lk/news.php |
| • மோட்டர் வாகன சாரதி | மாதரிப்படிவம் இலக்கம் 03<br>https:www.colombo.mc.gov.lk/news.php |
| • பாதுகாப்பு படைவீரர் | மாதரிப்படிவம் இலக்கம் 04<br>https:www.colombo.mc.gov.lk/news.php |

3. ஒரு பதவிக்கு மேல் விண்ணப்பிக்கும் பட்சத்தில் ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.
4. மேற்படி பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்தல் தொடர்பான இறுதித் தீர்மானம் மாநகர ஆணையாளருக்கு சொந்தமானது.

**ஏ.டி.எஸ்.ரோஹண**
மாநகர ஆணையாளர்(க.நி.)
கொழும்பு மாநகர சபை
2026.07......... ஆம் திகதி

மாநகர ஆணையாளர் அலுவலகம்
கொழும்பு மாநகர சபை
நகர மண்டபம்,
கொழும்பு 07.